பக்கங்கள் 17 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## அனலைதீவு மீனவர்கள் இருவரைக் காணவில்லை

### கடலில் தேடுதல் நடவடிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், அனலைதீவில் இருந்து மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்ற இருவர் கரை திரும்பவில்லை 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 29 செவ்வாய்க்கிழமை 11.06.2024 அதிர்வு 316



# தமிழரசுக் கட்சியுடன் அநுர சந்திப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினருக்கும் இடையில் விசேட சந்திப்பு இன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி குழுவினர், மாவை சேனாதிராஜா தலைமையிலான தமிழரசுக் கட்சியினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ். மார்டின் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. 02▶

## ஜே.வி.பியின் திட்டம் யாழில் வெளியானது

# புதிய அரசமைப்பின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## அதுவரையிலும் 13 ஆம் திருத்தம் முழு அளவில் நடைமுறையாக்கம்



"தேசிய இனப் பிரச்சினைக்குப் புதிய அரசமைப்பு மூலமே தீர்வு காணப்பட வேண்டும். அதுவரையில் தற்போதுள்ள மாகாண சபை முறைமையை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்தோடு முன்னெடுக்க வேண்டும்." 04▶

# அதிபர், ஆசிரியர்கள் நாளை போராட்டம்!

சம்பள முரண்பாட்டைத் தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி நாளை புதன்கிழமை சகல அதிபர்களும், ஆசிரியர்களும் போராடத் தயாரா குங்கள் என ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர் கூட்டமைப்பினர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய அரசுக்கு எமது பலத் தைக் காட்டுவதற்கு அனைவரும் ஒன்றி ணைய வேண்டும். அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பள நிலுவை தீர்க் கப்படாமல் உள்ளதால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகி வரு கின்றனர்.

சம்பள நிலுவை தொடர்பில் அரசு டன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச்சு நடத்தியபோதும் இதுவரை தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவில்லை.

கடந்த வருடங்கள் ஆசிரியர்களின் சம்பள நிலுவை கோரி கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலை யில் சில கோரிக்கைகளை மட்டும் அரசு நிறைவேற்றியது. ஆனால், அதிபர்கள், ஆசிரியர்களின் ஏனைய நிலுவைகள் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் தீர்க் கப்படாமல் உள்ளமையால் அவற்றைத் தீர்க்கும் முகமாக அரசுக்கு அழுத்தம் வழங்குவதற்காகப் போராட்டத்தை ஒழுங்கு செய்துள்ளோம்.

தொடர்ந்து நாங்கள் ஏமாறுவதற்குத் தயாரில்லை என்பதை அரசுக்கு எடுத் துக்கூற வேண்டும். அவ்வாறு இல் லாவிடின் அடுத்து வரும் மாதங்களில் நாடு பூராகவும் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து அரசுக்குப் பாடம் புகட்டப்படும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்." - என்றனர்.

நாளை மாவட்டங்கள் தோறும் அதிபர்கள், ஆசிரியர்கள் ஒன்றி ணைந்து போராட்டங்கள் மற்றும் பேரணிகளை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.











## தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது பிரதானமாக ஜனாதிபதித் தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலை மைகள் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சேனா திராஜா, சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நிர்வாகச் செய லாளர் எஸ்.எக்ஸ். குலநாயகம், ஊடகப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

தேசிய மக்கள் சக்தி சார்பில் அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற் றும் அந்தக் கட்சியின் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர்களான பிமல் ரத்நாயக்கா, இராமலிங்கம் சந்திரசேகர் உட்படப் பலரும் கலந்துகொண்டிருந்த னர்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி குழுவினர் நேற்று தமிழரசுக் கட்சியினரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்த நிலையில் இன்று தேசிய மக்கள் சக்தியினரும் தமிழரசுக் கட்சியினரைச் சந்தித்துள்ளமை அரசி யலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.



# சஜித் நயினாதீவில் வழிபாடு

(எஸ்.நிதர்ஷன்)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயிலுக்கு இன்று விஜயம் செய்து விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் திருமதி உமாச்சந்திர பிரகாஷ் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.











# துன்னாலையில் சட்டவிரோத கொல்களத்தை முற்றுகையிட்டு பசு மாடுகளை மீட்ட பொலிஸ்

(த.சுபேசன்)

பருத்தித்துறை – துன்னாலைப் பகுதியில் நீண்ட காலமாக இயங்கி வந்த சட்டவிரோத கொல்களத்தை முற்றுகையிட்ட சாவகச்சேரிப் பொலிஸார் இறைச்சியாக்கப்படவிருந்த கன்றுத்தாச்சி மாடு உட்பட மூன்று பசு மாடுகளை நேற்று காலை வேளையில் உயிருடன் மீட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மட்டுவில் பிரதேசத்தில் அண்மையில் வளர்ப்பு மாடுகள் திருடப்பட்டதாக பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் நீண்ட தேடுதலுக்கு மத்தியில் பொலிஸார் மேற்படி சட்டவிரோத கொல்களத்தை கண்டுபிடித்துள்ளனர்.

இதன்போது சாவகச்சேரி – மட்டுவில் கிராமத்தில் திருடப்பட்ட ஒரு மாட்டைப் பொலிஸார் மீட்டதுடன், ஏனைய இரண்டு மாடுகள் அடையாளம் காணப்படாத நிலையில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் வைத்து பராமராக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, மட்டுவில் கிராமத்தில் திருடப்பட்ட ஏனைய மாடுகள் இறைச்சியாக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சுற்றிவளைப் பின்போது மூன்று பசு மாடுகள் மீட்கப்பட்டதுடன் பசு மாடுகளைக் கடத்தப் பயன்படுத்தப் பட்ட வாகனம் ஒன்றுடன் பிரதான சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### புதிய...

– இதுவே தங்களின் நிலைப்பாடு என ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் அந்த அமைப்பின் பிரதிநிதிகளும் இன்று காலை யாழ்ப்பாணத்தில் தம்மைச் சந்தித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் குழுவிடம் தெரிவித்தனர்.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி குழுவினர் தெரிவித்த கருத்துக்கள் குறித்து அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளரும் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தகவல் வெளியிட்டார்.

அவர் தெரிவித்தவை வருமாறு:–

“மாகாண சபை முறைமை முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை 2019 ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே தாங்கள் இடம் பெறச் செய்துள்ளனர் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தம் தீர்வாகாது என்று தமிழர் தரப்பு கூறுவதைப் போலவே, அது தீர்வு அல்ல என்பதைத் தாங்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று சுட்டிக் காட்டிய அநுரகுமார திஸாநாயக்க, தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு புதிய அரசமைப்பு மூலமே எட்டப்பட வேண்டும் என்றும் சொன்னார்.

அதுவரையில் மாகாண சபை முறைமை நீடிக்க வேண்டும். தாமதிக்காமல் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். 13 ஆம் திருத்தம் மூலம் அரசமைப்புக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து ஏற்பாடுகளும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு எந்த வகையில் அமைய வேண்டும், அதை அணுகுவதற்கான படிமுறைகள், பாதைகள் குறித்து எல்லாம் நாங்கள் இருந்து வரையறை செய்து, முடிவுகளை எட்டி, திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும். அந்தப் படிமுறைக்கு அமைய புதிய அரசமைப்பு உருவாக்கத்தையும், அதன் மூலம் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வையும் நாம் எட்ட வேண்டும் என்ற கருத்து நிலைப்பாட்டை அவர்கள் முன்வைத்தனர்.

அவற்றை உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பகிரங்க அறிவிப்புக்களிலும் வெளிப்படுத்துங்கள். நாம் பரிசீலித்து உரிய முடிவை எடுப்போம் என்று அவர்களுக்குத் தெரியப்படுத்தினோம்.”

– என்றார் சுமந்திரன் எம்.பி.

### அனலைதீவு...

எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அனலைதீவில் இருந்து நேற்று மாலை 5 மணிக்கு கடலுக்குப் புறப்பட்டவர்கள் இதுவரை கரை திரும்பவில்லை என்று அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஜோன் பொஸ்கோ தெரிவித்தார்.

35 மற்றும் 44 வயதுடைய இரண்டு மீனவர்களே இவ்வாறு காணாமல்போயுள்ளனர்.

இது தொடர்பில் மீன்பிடித் திணைக்களம் மற்றும் கடற்படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காணாமல்போன இரண்டு மீனவர்களையும் தேடி இன்று காலை 3 படகுகள் கடலுக்குச் சென்றுள்ளன என்றும் அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் மேலும் கூறினார்.



# தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை வழங்குமாறு கோரி நடத்தப்பட்ட வீதி நாடகம்

(மஸ்கெலியா )

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை வழங்குமாறு கோரி பொறுப்பான அரச நிறுவனங்களுக்கும் மக்களுக்கும் அறிவிக்கும் நோக்கில் வீதி நாடகம் ஒன்று சனிக்கிழமை (08) தலவாக்கலை மற்றும் கொட்டகலை நகரங்களில் நடைபெற்றது.

வீடு, காணி உரிமைகளை வழங்குமாறும், மலையகத் தமிழர்கள் என்று தமது பெயரைப் பயன்படுத்த அனுமதிக்குமாறும் கோரி இந்த வீதி நாடகங்கள் நடத்தப்பட்டன.

200 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த தோட்டத் தொழிலாளர்கள் இன்றுவரை எதிர்கொண்ட நிகழ்வுகள் வீதி நாடகப் பாணியில் அரங்கேற்றப்பட்டது.

பிரைட் நிறுவனத்தால் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அணி திரளும் நேரம்

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி விட்டது. இன்னும் 98 நாள்கள் முதல் 128 நாள்களுக்குள் ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு நடந்து முடிந்து, அடுத்த நாள் முடிவுகள் வெளியாகி விடும்.

2022 இல் நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களை அடுத்து, துண்டு துண்டாக - குழுக்கள் குழுக்களாக - நாடாளுமன்றத்துக்குள்ளும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் பிரிந்து நின்ற அரசியல் தரப்புகள், இப்போது இந்தத் தேர்தலில் களமிறங்குகின்ற ஏதேதோ பிரிவுகளுடன் அணிசேரும் கட்டாயம் - சூழல் - வந்துவிட்டது.

மொட்டுக் கட்சியிலிருந்து பிரிந்த ஒரு தரப்பும், மொட்டுக்கட்சி மூலம் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக ஒன்றிணைந்து செயல்படத் தீர்மானித்திருக்கின்றன.

அமைச்சர்கள் சுசில் பிரேமஜயந்த, நிமால் சிறிபால டி சில்வா, துமிந்த திஸநாயக்க, மஹிந்த அமரவீர, நளின் பண்டார, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் திஸநாயக்க மற்றும் அநுர பிரியதர்ஷன யாப்பா, நிமல் லான்ஸா ஆகியோரே ஒன்றாக ரணில் விக்கிரமசிங்க அணியில் பணியாற்றத் தீர்மானித்திருக்கின்றார்கள்.

இதில் கடைசி இருவரை தவிர மற்றவர்கள் தங்களை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிர்வாகிகள் என்று இப்போது உரிமை கோருபவர்கள்.

கடந்த சனிக்கிழமை அம்பலாங்கொடையில் தாம் நடத்திய பொதுக் கூட்டத்திலேயே இந்த அறிவிப்பை அவர்கள் விடுத்தனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்காக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் ஆதரவு திரட்டி வரும் அநுர பிரியதர்ஷன யாப்பாவும் நிமல் லான்ஸாவும் அவர்களின் அந்த மேடையில் ஏறி அந்தக் கூட்டத்தை ரணில் ஆதரவுப் பிரச்சார பொதுமடையாக மாற்றினர்.

அதேசமயம் நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் அண்மைக் காலம் வரை போக்கிடமின்றி தனித் தனி அணிகளில் இயங்கி வந்த டலஸ் அழகப்பெருமா குழு, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் சு.கவிலிருந்து வெளியேற்றப்பட்ட தயாசிறி ஜயசேகர போன்றோர் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், வேட்பாளரும், எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸவின் அணிக்கு பின்னால் ஒன்றிணைந்து செயலபடுவது குறித்து தனித்தனியாகப் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறப்படுகிறது.

தவிரவும், பேரினவாத வெறிப்போக்கில் நடந்து கொள்ளும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல போன்றோரின் குழுக்களைச் சேர்ந்தோரை பிரதான மூன்று கட்சிகளின் வேட்பாளர்களான ரணில், சஜித், அநுர மூவருமே கிட்டவும் சேர்க்க விரும்பாத காரணத்தினால், அவர்கள் வேறு வழியின்றி தங்களுக்குள் ஓர் அணியமைத்து என்ன செய்வது என்று தெரியாத இக்கட்டு நிலையில் அல்லாடுகின்றனர்.

சுதந்திரக் கட்சியின் பெயரில் களம் இறங்கும் திட்டத்துடன் இருந்தாலும், அது சாத்தியப்படாத நெருக்கடியில் விஜயதாஸ ராஜபக்ஷ - மைத்திரிபால சிறிசேன அணி தனித்து நிற்கின்றது.

மொட்டுவின் சின்னத்தில் போட்டியிடுவதற்கு ரணில் மறுத்துவிட்ட நிலையில், தமது சின்னத்தில் ஒரு வேட்பாளரைக் களம் இறக்குவதா என்று முடிவு செய்ய முடியாமல் தடுமாறுகின்றது பொதுஜன பெரமுன. இதுவரை காலமும் அதன் மாற்று வேட்பாளராக முன்னிலைப்படுத்தப்பட்டு வந்த கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக பெரேரா இன்றைய களச் சூழலில் தமக்கு வெற்றிக்கான வாய்ப்பு கிஞ்சித்தும் இல்லாத சூழ்நிலையில், நிலைமையை உணர்ந்து கொண்டு, தான் வேட்பாளராகக் களமிறங்க மறுத்துவிட்டார் என்று தெரிய வருகின்றது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மொட்டுவின் வேட்பாளராகத் தன்னை களமிறக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பல தரப்புகள் மூலமும் ராஜபக்ஷக்களுக்கு சமபிக்க ரணவக்க விடுத்து வந்தாலும், அவற்றுக்கு இசையும் நிலையில் மொட்டுத்தரப்பினர் இல்லை என்று கூறப்படுகின்றது.

இந்தப் பிரதான மூன்று வேட்பாளர்களுக்கும் மேலதிகமாக ஓரிரண்டு வேட்பாளர்கள் களமிறங்க, அவர்களின் பின்னால் மேற்படி எஞ்சிய அணிகள் திரளும் என்று எதிர்பார்க்கலாம்.

தேர்தல் நெருங்குவதால் நாடாளுமன்றத்தில் பல்வேறு குழுக்களாகச் சிதறிக் கிடக்கும் தரப்புகள் அணி திரளும் நேரம் இது.




# அநு. கெக்கிராவ முஸ்லிம் வித்திக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள்



(எம்.எம்.றம்ஸீன்)

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 199 ஆவது கட்டமாக 10 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் அநுராதபுரம், கெக்கிராவ முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பங்களிப்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு லட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

# காரைதீவு பிரதேச செயலர் பிரிவில் பிளாஸ்டிக் கழிவு முகாமை தினம்!





(அஸ்ஹர் இப்றாஹிம்)

பிளாஸ்டிக் கழிவுகள் முகாமைத்துவ தினத்தை முன்னிட்டு காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.எஸ்.ஜெகராஜனின் வழிகாட்டலில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தின் பாவனை தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றன.

காரைதீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களிலுள்ள பிளாஸ்டிக் பொருள்கள் விற்பனை நிலையங்கள், பிளாஸ்டிக் பொருள்கள் அதிகம் பாவனையுள்ள இடங்கள் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்களில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.



# வடமேல் மாகாண பட்டதாரிகளுக்கு 2ஆம் கட்ட ஆசிரியர் நியமனம்!

(எம்.எம்.ஜெஸ்மின்)

வடமேல் மாகாணத்தில் 668 பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் வழங்கும் இரண்டாம் கட்ட நிகழ்வு குருநாகல் மலியதேவ ஆண்கள் பாடசாலையில் ஆளுனர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடமேல் மாகாண பிரதம செயலாளர் தீபிகா கே. குணரத்தின, பிரதம அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் நயனா காரியவசம், ஆளுனரின் செயலாளர் இலங்கக்கோன், மாகாண கல்வி பணிப்பாளர் முதிதா ஜயதிலக, உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.





குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு டச்பே கடற்கரையில் சிரமதானம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, கடந்த சனிக்கிழமை (08) திருகோணமலை கடற்கரை மற்றும் கடற்பகுதியை சுத்தப்படுத்தும் சிரமதான பணி, கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

திருகோணமலை டச்பே கடற்கரை மற்றும் கடற்பகுதியில் உள்ள பொலித்தீன், பிளாஸ்டிக் கழிவுகள் திருகோணமலை பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர்கள், நிலாவெளி கடற் பாதுகாப்பு நிலைய உறுப்பினர்கள், திருகோணமலை சுழியோடிகள் சங்கத்தினர் ஆகியோரால் சுத்தப்படுத்தப்பட்டன.

சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் மதனவாசன் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்,






# வேலையற்ற பட்டதாரிகளான எங்களுக்கு அரச நியமனங்களை விரைவில் வழங்குக!

## திருகோணமலை வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் கோரிக்கை




**(ஹஸ்பர்)**

பட்டதாரிகளுக்கான நியமனங்களை அரச துறையில் வழங்குங்கள் என்று திருகோணமலை வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றியத்தின் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் (09) கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போதே இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்த விடயம் தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளவை வருமாறு,

எங்களது வேலையில்லா பிரச்சினையை ஜனாதிபதி செவிமடுக்க வேண்டும். இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேசுவதற்காக ஊர் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாங்கள் நாடி உள்ளோம்.

இந்த அரசு மிக விரைவில் எங்களது வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையைச் சரியான முறையில் தீர்க்காவிடின் வீதிக்கு இறங்கிப் போராடுவோம்.

900 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் எந்தவிதமான வேலையும் இல்லாமல் வீதிகளிலும் ஏனைய இடங்களிலும் இருக்கின்றார்கள். எங்களது வயது 35 கழிந்து விட்டது. எங்களுக்கு சரியான வேலையை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம். 35 வயதுக்குப் பின்னர் நிறுவனங்களிலும் உள்ளீர்ப்பு செய்வது மிகவும் கடினமாகும்.

உள்வாரி, வெளிவாரி, வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் என எவ்வித பாகுபாடும் இன்றி எங்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்று தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

பெண்ணுரிமை, பெண் சமூகம், பெண்களுக்கான பாதுகாப்பு சகலதையும் வழங்கக் கூடிய ஒரு நாட்டில், எங்களுக்குக் கிடைக்கப்பெறும் கால அவகாசம் மிகவும் அதிகமாக இருக்கின்றது.

உரிய வயதில், உரிய வேலை வாய்ப்புகளைத் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். – என்று தெரிவித்தனர்.

# உயர்தரப் பரீட்சையில் முதலிடங்கள் பெற்ற மாணவர்களைக் கௌரவித்த மக்கள் வங்கி











**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2023 யில் சகல பாடங்களிலும் நாடளாவிய ரீதியிலும் மாவட்டத்திலும் அதிகூடிய இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு அண்மையில் மக்கள் வங்கி பணப் பரிசில்களை வழங்கி கௌரவித்தது.

இங்கு, ஒவ்வொரு பாடப்பிரிவின் கீழும், தேசிய ரீதியில் முதலாம் இடத்துக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் இடத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும் மூன்றாம் இடத்துக்கு 75 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.







EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# பட்டிருப்பு தேசிய கல்லூரி மாணவர்களை கல்வியின் பால் ஊக்குவிக்கும் செயற்பாடு

( அஸ்ஹர் இப்றாஹிம்)

களுவாஞ்சிகுடி, பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் (தேசிய பாட சாலை) தரம் 6 முதல் 9 வரையிலான தரங்களுக்கு மாணவர்களை ஏனைய மாணவர்கள் முன்னிலையில் கல்வி யின் பால் ஊக்கப்படுத்தும் வகை யில் முதலாம் தவணை தேர்ச்சி அறிக் கைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.சபேஸ் குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதல் மூன்று நிலை மாணவர்களுக்கும், முழு தரத்தொகுதி மாணவர்களுக்கும் தேர்ச்சி அறிக்கை களும் பரிசில்களும் வழங்கி வைக் கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர் கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.



# லிந்துலை கடைகள், உணவகங்களில் சுகாதாரக் குழுவினர் திடீர் சோதனை!





(தலவாக்கலை)

தலவாக்கலை லிந்துலை வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட நகரங்கள் மற்றும் புறநகர் பகுதிகளில் அமைந் துள்ள கடைகள் மற்றும் உணவகங்க-ளில் பொது சுகாதார அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் (9) திடீர் சோதனை மேற்கொண்டது.

லிந்துலை, மெராயா, இல்டன்ஹோல், நாகசேனை, ஹோல்புறூக், மன்ராசி, அக்கரப்பத்தனை, டயகம போன்ற நகரங்களிலும் புறநகர்ப் பகுதிகளிலும் உணவகங்கள், பேக்கரிகள், கடைகள் போன்றன கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இங்குசுகாதாரமற்றஉணவுப்பொருள் களை விற்பனை செய்யும் பல வர்த் தக நிலையங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டன.

பழுதடைந்த உணவுப் பொருள்களை விற்பனை செய்த 38 வர்த்தக நிலை யங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் பழுதடைந்த நுகர்வுப் பொருள்களை அழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

லிந்துலை சுகாதார வைத்திய அதி காரி ரெய்ஷினி தலைமையில் ஹங் குரான்கெத்த, மத்துரட்ட, வலப்பனை, நுவரெலியா, கொத்மலை, கொட்டகலை, அம்பகமுவ, பொகவந்தலாவ, மஸ் கெலியா மற்றும் நவ திஸ்பனை ஆகிய பிரதேசங்களில் உள்ள சுகாதார வைத் திய அதிகாரி அலுவலகங்களில் பணிபு ரியும் 35 பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் நிர்வாக பொது சுகாதார பரிசோ தகர்கள் குழுவினர் ஒருங்கிணைந்து இந்தச் சோதனைகளை மேற்கொண்ட னர்.









# 11 லட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் உபகரணம் யாழ். வைத்தீஸ்வராவுக்கு

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 226 ஆவது கட்டமாக 11 லட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (09) இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு லட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.






# பொத்துவில் பிரதேச உயர்தர மாணவர்களுக்கு மாதாந்த கல்வி உதவிப்பணம் வழங்கி வைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொத்துவில் தொகுதிக்கு உட்பட்ட சரஸ்வதி மகா வித்தியாலயம், தாண்டியடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், பொத்துவில் மெதடிஸ் தமிழ் மகா வித்தியாலயம், கோமாரி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலையில் கல்வி பயிலும் 09 மாணவர்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் கல்வி உதவிப் பணம் வழங்கும் நிகழ்வு ஊறணி சரஸ்வதி வித்தியாலயத்தில் அதிபர் ஐ.மோகன்ராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான காந்தன், சுரேஸ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான உதவிகளை வழங்கினர்.

இணைந்த கரங்கள் அமைப்பின் நிதிப்பங்களிப்புடன் இந்த மாணவர்களுக்கான மாதாந்த மேலதிக கல்வி செயற்பாடாக இது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# மூதூர் பகுதி உணவகங்களை சோதனையிட்ட சுகாதாரப் பிரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட உணவகங்கள், பல சரக்கு கடைகள் மற்றும் பேக்கரிகள் மீது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திடீர் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

இதன் போது மனித நுகர்வுக்குப் பொருத்தமில்லாத, காலாவதியான உணவுப் பொருள்கள், உணவுப் பொருள்களுடன் ஏனைய பொருட்கள் களஞ்சியப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு கடை உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

மேலும் சில வர்த்தக நிலையங்கள் மீது வழக்குத் தாக்கலும் மேற்கொள்ளப்பட்டது.

மேற்பார்வை பொது பரிசோதகர் தலைமையில் இடம்பெற்ற இந்தத் திடீர் சுற்றி வளைப்பின் போது மனித நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருள்கள் எரித்து அழிக்கப்பட்டன.





# கல்முனை ஸாஹிரா கல்லூரியில் பழைய மாணவர்களால் மரம் நடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பழைய மாணவர்கள் தாம் கற்ற பாடசாலையுடன் மிகவும் நெருக்கமான இணைப்பில் இருப்தால் கல்வி மற்றும் புறக்கிருத்திய செயற்பாடுகளில் பாடசாலையை முன்னோக்கி இட்டு செல்வதில் பாரிய பங்களிப்பை வழங்கக்கூடியதாக இருக்கும்.



அந்த வகையில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவர்களான 'ஸஹிரியன் 90' நண்பர்களின் அமைப்பால் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தாய்ப் பாடசாலையான கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் பலா மரக்கன்றுகள் நடப்பட்டன.

அத்துடன் பூச்சாடியுடன் பூ மரக் கன்றுகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.




# ஒலுவில் கடற்கரை பகுதியில் சுற்றாடல் தினச் சிரமதானம்

(எம் எப். நவாஸ்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.டி.எம் இர்பான் தலைமையில் ஒலுவில் வெளிச்சவீட்டுக் கடற்கரையை சுத்தப்படுத்தும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், வெளிச்ச வீட்டைச் சூழவுள்ள பகுதிகள் முற்றாகச் சுத்தப் படுத்தப்பட்டன. அத்துடன் மரநடுகை நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டது.



இதற்காக அட்டாளைச்சேனை பிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் நிர்வாகிகள், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், லைட் ஹவுஸ் துறை மீனவர் சங்க மீனவர்கள், இலங்கை கடற்படை பிரிவினர், பசுமை வலையை உறுப்பினர்கள் மற்றும் ஒலுவில் இளைஞர்கள் பங்குபற்றினர்.

பிளாஸ்டிக் நிறுவனம் ஒன்றால் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதற்காக குப்பைத் தொட்டி ஒன்றும் அங்கு வைக்கப்பட்டது.



# பா.ஜனதாவின் அடுத்த தலைவர் யார்? ஊடகங்களில் பரபரப்புத் தகவல்கள்!

புதுடெல்லி, ஜூன் 11

பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்கள் அனைவரும் மத்திய மந்திரிகளாக பதவி ஏற்று இருப்பதால், கட்சியின் அடுத்த தலைவர் யார்? என்கிற கேள்வி மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 293 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது.

பிரதமர் மோடி தொடர்ந்து 3 ஆவது முறையாக பதவியேற்று 'ஹாட்ரிக்' சாதனை படைத்துள்ளார். அவரோடு 71 மந்திரிகளும் பதவியேற்று உள்ளனர்.

பதவியேற்ற மந்திரிகளில் பாரதீய ஜனதா கட்சியின் மூத்த நிர்வாகிகள் பலர் இடம் பெற்று உள்ளனர். ராஜ்நாத் சிங், அமித்ஷா, நிதின் கட்காரி, நிர்மலா சீதாராமன், பியூஷ் கோயல் மட்டுமல்லாது கட்சியின் தேசிய தலைவராக உள்ள ஜே.பி.நட்டாவும் மந்திரியாகி உள்ளார். அது மட்டுமல்ல, கட்சியின் அடுத்த தலைமை முகமாக பார்க்கப்பட்ட மத்திய பிரதேசத்தின் முன்னாள் முதல்-மந்திரி சிவராஜ்சிங் சவுகான், பூபேந்திர யாதவ், சி.ஆர்.பாட்டீல் ஆகிய முன்னணி தலைவர்களும் மந்திரிகளாகி விட்டனர்.

பாரதீய ஜனதா கட்சியைப் பொறுத்தவரை ஒருவருக்கு ஒரு பதவி என்கிற சூத்திரமே பொதுவாக இருந்து வருகிறது. இதன் அடிப்படையில் ஜே.பி.நட்டாவிடம் இருந்து கட்சியின் தேசிய தலைவர் பதவி மாற்றப்படும் எனத் தெரிகிறது. ஏற்கனவே அவரது தலைவர் பதவிக் காலம் முடிவடைந்துதான் இருந்தது. தேர்தலுக்காக நீட்டித்துக் கொடுத்திருந்தனர்.

இதனால் கட்சிக்கு புதிய தலைவரை நியமிக்க வேண்டியது அவசியமாகி இருக்கிறது. புதிதாக யாரை நியமிப்பார்கள் எனக் கேள்வி எழுந்திருக்கிறது. இருக்கிற மூத்தவர்கள் அனைவரும் மந்திரிகளாகி இருப்பதால் தேசிய தலைவர் பதவி யாருக்கு போகும்? என்பது மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

தற்போதுள்ள நிலையில் முக்கியமான சிலரைக் கட்சியின் டெல்லி வட்டாரங்கள் குறிப்பிட்டன. அதில் சுனில் பன்சால், வினோத் தாவ்டே, அனுராக்சிங் தாக்குர் மற்றும் ஓம் பிர்லா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சுனில் பன்சால் கட்சியின் வேகமான செயல்வீரராக பார்க்கப்படுகிறார். ராஜஸ்தானைச் சேர்ந்த இவருக்கு 54 வயது ஆகிறது. உத்தரபிரதேச மாநிலத்தின் அமைப்பு பொதுச்செயலாளராக இருந்த இவரை கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு தேசிய பொதுச்செயலாளர் ஆக்கியமையுடன் மேற்கு வங்காளம், தெலுங்கானா மற்றும் ஒடிசா மாநிலங்களுக்கு பொறுப்பாளராகவும் ஆக்கினர்.

இவருக்கு தலைவர் பதவி கொடுக்க வாய்ப்பு இருக்கலாம் என கூறப்படுகிறது.

இவருக்கு ஈடாக தேசிய பொதுச் செயலாளர் வினோத் தாவ்டேயும் பார்க்கப்படுகிறார். வினோத் தாவ்டே மராட்டியத்தைச் சேர்ந்தவர். 60 வயது ஆகிறது.

பொதுத்தேர்தல்களில் மக்களை கவரும் யுக்திகளை அமைப்பதில் வல்லவர் என கூறுகிறார்கள். அதுமட்டுமின்றி இந்த ஆண்டின் இறுதியில் மராட்டியத்தில் சட்டசபை தேர்தல் நடக்க இருக்கிறது. மராட்டியத்தை பா.ஜனதா தீவிரமாக பார்ப்பதால் இவருக்குத் தலைவர் பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு அடுத்தபடியாக அனுராக் சிங் தாக்குர் பேசப்படுகிறார். இமாசல பிரதேச முன்னாள் முதல் மந்திரியின் மகனான இவர் அங்குள்ள ஹமிர்புர் தொகுதியில் தொடர்ந்து 5 முறை வெற்றி பெற்று எம்.பி. ஆனவர். ஏற்கனவே மத்திய மந்திரி ஆனவர். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய தலைவராகவும் இருந்துள்ளார்.

இமாசலபிரதேசத்தைச் சேர்ந்த ஜே.பி. நட்டாவுக்கு மந்திரி பதவி வழங்கப்பட்டுள்ளதால் இவருக்கு வழங்கப்படவில்லை. இதனால் தேசிய தலைவர் பதவி வழங்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

தலைவர் போட்டியில் இருக்கும் மற்றொருவர் ஓம் பிர்லா. 17 ஆவது மக்களவையை நடத்திய சபாநாயகர். ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர் மந்திரிசபையில் பொறுப்பேற்கவில்லை. எனவே தேசிய தலைவராக வாய்ப்புக் கிடைக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இந்த 4 பேரில் யாராவது ஒருவருக்கு தேசிய தலைவர் பதவி வழங்கப்படலாம் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தாலும், பா.ஜனதாவைப் பொறுத்தவரை யாருமே யூகிக்காத ஒருவரை பிரகடனப்படுத்தி ஆச்சரியப்பட வைப்பதையும் ஒரு பாணியாக வைத்துள்ளது என்பதையும் மறக்க வேண்டாம் என நிர்வாகிகள் தெரிவித்தனர்.





# மலாவியின் துணை ஜனாதிபதி சிலிமா பயணம் செய்த ஹெலிகொப்டர் மாயம்!

மலாவியின் துணை ஜனாதிபதி சவுலோஸ் சிலிமா உட்பட பத்து பேர் பயணம் செய்துகொண்டிருந்த ஹெலிகொப்டர் காணாமல்போயுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சௌலோஸ் கிளாஸ் சிலிமா ஆகிய 51 வயதுடைய துணை ஜனாதிபதியே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

மலாவியின் – தலை நகரில் இருந்து பயணத்தை ஆரம்பித்த பின்னர் ஹெலிகொப்டருக்கான தொடர்பு அற்றுப் போயுள்ளது என்று அந்த நாட்டு பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் மலாவி ஜனாதிபதி உடனடி தேடுதல் நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேடுதல் நடவடிக்கைகளை மலாவியின் அண்டை நாடுகளும் அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே மற்றும் இஸ்ரேலிய அரசுகளும் ஒன்றிணைந்து மேற்கொள்கின்றன என்று அவர் கூறியுள்ளார்.

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சாத்தியமான வேட்பாளராகக் கருதப்படும் சிலிமா, ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக 2022 இல் கைது செய்யப்பட்டார்.

எவ்வாறாயினும், கடந்த மாதம் அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை மலாவி நீதிமன்றம் மறுத்து தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.



# எகிப்திய ராணியின் சிலைக்கு மூன்று நாடுகள் உரிமை கோரல்

ஜேர்மன் தலைநகர் பெர்லினிலுள்ள அருங்காட்சியம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ள எகிப்திய ராணி ஒருவரின் சிலையை தனதாக்கிக்கொள்ள 3 நாடுகள் உரிமை கோருகின்றன என்று ஜேர்மனிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் சிலைக்காக எகிப்து, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் உரிமை கோருகின்றன. நெஃபெர்டிட்டி என்ற எகிப்திய ராணி ஒருவரின் சிலைக்காகவே இவ்வாறு போட்டிகள் உருவாகியுள்ளன.

சிலையாக வடிவமைக்கப்பட்டுள்ள குறித்த பெண் அகெனாடென் எனும் எகிப்திய மன்னரின் மனைவி ஆவார். ஜேர்மன் தலைநகர் பெர்லினிலுள்ள அருங்காட்சியம் ஒன்றில் இந்த சிலை வைக்கப்பட்டுள்ளது.

1924 ஆம் ஆண்டு முதல், இந்த சிலை தங்கள் நாட்டில் இருக்க வேண்டும் என்று எகிப்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கோரி வருகின்றன.

உலகிலேயே அழகான பெண் என கருதப்படும் நெஃபெர்டிட்டியின் சிலையை, ஜேர்மன் ஆய்வாளரான லுட்விக் போர்ச்சார்ட் என்பவர் ஆய்வொன்றில் மூலம் கண்டுபிடித்ததால், அதை அவர் நேரடியாக ஜேர்மனிக்குக் எடுத்து சென்றுள்ளார்.

ஆனால், அவர் ஒரு எகிப்து ராணி என்றும், அவரது சிலை எகிப்தில்தான் இருக்கவேண்டும் எனவும் எகிப்தியர்கள் உரிமை கோருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஜனாதிபதி ஜோ பைடன் மீது வழக்குத்தாக்கல்!

## இஸ்ரேலிய இனப்படுகொலைக்கு அமெரிக்க அரசு உடந்தையாம்!!

அமெரிக்காவில் உள்ள சிவில் உரிமைகள் குழுவான அரசமைப்பு உரிமைகளுக்கான மையமானது, அந்த நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் மீது வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

காசாவில் இடம்பெற்ற இஸ்ரேலிய இனப்படுகொலைக்கு அமெரிக்க ஜனாதிபதி வெளியுறவுத்துறை செயலாளர் மற்றும் பாதுகாப்பு செயலாளர் உட்பட அமெரிக்க அரசு உடந்தையாக இருப்பதாக அந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள பாலஸ்தீனிய மனித உரிமைகள் அமைப்புக்களான அல்-ஹக் மற்றும் டிஃபென்ஸ் ஃபார் சில்ட்ரன் இன்டர்நேஷனல் (அமெரிக்காவில் உள்ள பாலஸ்தீனிய அமைப்பு) ஆகியவை இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளன.

இந்த முறைப்பாடானது அமெரிக்காவின் சன் பிரான்சிஸ்கோவில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

போரில் ஐந்து குடும்ப உறுப்பினர்களை இழந்த வழக்கின் வாதியான லைலா எல்-ஹடாத் என்ற நபர் “காசாவில் எஞ்சியிருக்கும் எனது குடும்ப உறுப்பினர்களுக்கு அவர்கள் சார்பாக வாதிடுவதற்கு என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன். இதை நான் உறுதியளிக்கின்றேன்” என கூறியுள்ளார்.




# பறவைக் காய்ச்சலைத் தடுக்கும் நோக்கில் பசுப்பால் விற்பனைக்கு அமெரிக்கா தடை!

அமெரிக்காவில் பறவைக்காய்ச்சல் பரவிவரும் நிலையில் அதனைத் தடுக்கும் நோக்குடன் பசுப்பால் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் அதன் மாகாணங்களில் பறவைக்காய்ச்சல் வேகமாக பரவி வருகின்றது. இந்த நிலையில் அவை மாடுகளை அதிகம் பாதித்துள்ளமையால் கறந்த பச்சைப் பாலை அருந்தவும், விற்பனை செய்யவும் அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் தடை விதித்துள்ளது.

கடந்த வாரம் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட முதல் நபர் மெக்சிகோவில் உயிரிழந்ததுள்ளார். அதனை உலக சுகாதார நிறுவனம் உறுதி செய்தது.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனைகளில் பல்வேறு மாகாணங்களிலுள்ள கறவை பசுக்களுக்கு பறவை காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த நாட்டு வேளாண்மைத்துறை அறிக்கையின்படி அங்குள்ள 82 மந்தைகளில் பறவைக் காய்ச்சல் அறிகுறிகள் மற்றும் பரவல் உறுதி செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பாலை அருந்துவதற்கு அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் முன்னரே தடை விதித்திருந்தது.

எனினும் ‘மனித நுகர்வுக்கு அல்ல’ என்ற பிரிவின் கீழ் விற்பனை செய்யப்படும் பாலை, பல்வேறு தேவைகளுக்காக மனிதர்கள் அருந்துவது தொடர்ந்து வருகிறது.

இந்த நிலையில் பால் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்காவின் அறிவுறுத்தலையடுத்து பல்வேறு உலக நாடுகளும் பச்சைப் பாலை அருந்துவதை தடை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 05

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 11/06/2024

## ஒன்ராரியோ அமைச்சரவை மாற்றம் ஆசிரியர்களின் சங்கங்கள் வரவேற்பு

ஒன்ராரியோ, ஜூன் 11

ஒன்ராரியோ மாகாணத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட அமைச்சரவை மாற்றத்தை ஆசிரியர் சங்கங்கள் வரவேற்றுள்ளன.

ஒன்ராரியோ மாகாண C2



# மிசிசாகா நகர முதல்வர் தேர்வுக்கான இடைத்தேர்தலின் வாக்களிப்பு நேற்று

**ஒன்ராரியோ, ஜூன் 11**

**மிசிசாகா நகர முதல்வர் இடைத் தேர்தலில் வாக்களிப்பு நேற்று நடைபெற்றது.**

**மிசிசாகா நகரின் அடுத்த முதல்வருக்கான பதவிக்கு 16 பேர் போட்டியிடுகின்றனர்.**

**இவர்களில் நான்கு நகரசபை உறுப்பினர்கள், முன்னாள் நகர முதல்வரின் முன்னாள் கணவர் ஆகியோரும் அடங்குகின்றனர்.**

நகரசபை உறுப்பினர்களான கரோலின் பர்ரிஷ் ஸ்டீபன் டெஸ்கோ, அல்வின் டெட்ஜோ, டிபிகா டம்ரெலா ஆகிய நகரசபை உறுப்பினர்கள் இந்த இடைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

அத்துடன், முன்னாள் நகர முதல்வரின் முன்னாள் கணவர் பிறயன் குரொம்பி இந்த இடைத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

# வெளிநாட்டுத் தலையீட்டின் பங்காளர்கள் பெயர்களை வெளியிடுவதில் சிக்கல்நிலை

ஒன்ராரியோ, ஜூன் 11

கனடிய அரசியலில் வெளிநாட்டு குறுக்கீட்டு பங்கேற்பாளர்களின் பெயர்களை வெளியிடுவதில் கட்சிகளிடையே உடன்பாடு இல்லாத நிலை தொடர்வ தாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு தலையீட்டில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பாளர்களாக உள்ளனர் என்ற கவலை உளவுத்துறைக்கு உள்ளது என நாடா ளுமன்ற உறுப்பினர்களின் தேசிய பாதுகாப்பு, புலனாய்வு குழுவின் அண்மைய அறிக்கை கூறுகிறது.

கனடிய விவகாரங்களில் வெளிநாட்டு அரசாங்கங்கள் தலையிட உதவி யவர்களின் பெயர்களை வெளியிடுமாறு அரசாங்கத்தை பிரதான எதிர்க்கட்சியான கன்சர் வேட்டிவ் கட்சி வலியுறுத்தி வரு கின்றது.

ஆனாலும் இந்த முடிவை சட்ட அமுலாக்கப் பிரிவினரே எடுக்க வேண்டும் என லிபரல் கட்சி அரசாங்கம் தெரிவித்துள்ளது.





# குடியேற்ற நிகழ்வுகளுக்காக நிதி செலவீடு; பிரிட்டிஷ் கொலம்பியா முதல்வர் ஆட்சேபம்

பிரட்டிஷ் கொலம்பியா, ஜூன் 11 மேற்கு கனடாவின் 'செலவில்' ஒன்டாரியோ மற்றும் கியூபெக்கில் பெடரல் குடியேற்ற நிகழ்ச்சிகளுக் காகப் பணம் செலவிடப்படுவதாக பிரிட்டிஷ் கொலம்பியா முதல்வர் டேவிட் எபி குற்றம் சுமத்தியுள்ளார்.

வருடாந்த மேற்கத்திய முதல்வர்க ளின் மாநாட்டின் முடிவைக் குறிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் முதல்வர் எபி இதனைத் தெரிவித்துள்ளார்.

குடியேற்ற நிகழ்ச்சிகளுக்காக கியூபெக்கிற்கு 750 மில்லியன் டொலர் களை வழங்குவதாக அண்மையில் பெடரல் அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்த நிதி ஒதுக்கீடு தமக்கு ஏமாற் றமளிப்பதாகவும், பிரிட்டிச்க் கொலம் பியாவுக்கும் நிதி வழங்கப்படல் வேண்டும் எனத் தெரிவித்துள் ளார்.

ஒவ்வொரு 37 நாட்களுக்கும் 10,000 பேர் பிரிட்டிஷ்கொலம்பியாவிற்கு வருகின்றனர் எனவும், அகதிகள் வீட்டற்ற தங்குமிடங்களில் தங்க வேண்டும் என்றும் சர்வதேச மாண வர்களுக்கு ஆதரவு இல்லை என்றும் எபி கூறியுள்ளார்.



## ஒன்ராரியோ...

முதல்வர் டக் ஃபோர்ட் தனது அமைச்சரவையில் பெரும் மாற்றத்தை ஜூன் ஆறாம் திகதி அறிவித்தார்.

இந்த அமைச்சரவை மாற்றத்தில் புதிய கல்வி அமைச்சராக டொட் ஸ்மித் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த அமைச்சரவை மாற்றத்தை ஒன்ராரியோ மாகாணத்தின் முக்கிய ஆசிரியர் சங்கங்கள் வரவேற்றுள்ளன.

இந்த மாற்றம் டக் ஃபோர்ட் அரசாங் கத்துடன் ஒரு புதிய முன்னோக்கிய பாதைக்கு வழிவகுக்கும் என நம்புவ தாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.



# அரிய வெள்ளை நிறக் கரடியும், இரண்டு குட்டிகளும் டிரான்ஸ் - கனடா நெடுஞ்சாலை விபத்துகளில் பலி

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன் 11

நகோடா என அழைக்கப்படும் அரிய வெள்ளை நிற கரடியும், அதன் இரண்டு குட்டிகளும் உயிரிழந்துள்ளன என பார்க்ஸ் கனடா தெரிவித்துள்ளது.

நூற்றுக்கணக்கான மணிநேரத்தை செலவிட்டு, பார்க்ஸ் கனடா ஊழியர்கள் அண்மையில் பிரிட்டிஷ் கொலம்பியாவின் யோஹோ தேசிய பூங்காவில் இரண்டு புதிய குட்டிகளுடன் உறக்கநிலையிலிருந்து நகோடா வெளிப்பட்டதை கண்டறிந்தனர். பின்னர் அதைக் கொண்டாடியிருந்தனர்.

தென்கிழக்கு பிரிட்டிச்க் கொலம்பியாவில் உள்ள டிரான்ஸ்-கனடா நெடுஞ்சாலையில் ஒரே நாளில் இரண்டு வெவ்வேறு விபத்துகளை அடுத்து இப்போது மூன்று விலங்குகளும் இறந்துவிட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# கியூபெக்கில் குடியேறுவோர் நலனுக்காக 750 மில்லியன் டொலர்கள் நிதி ஒதுக்கீடு

கியூபெக், ஜூன் 11

கியூபெக் மாகாணத்தில் தற்காலிகமாக குடியேறுபவர்களின் அதிகரிப்புக்கு உதவுவதற்காக 750 மில்லியன் டொலர்களை வழங்குவதாக பெடரல் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த நிதியானது அதே நேரத்தில் புகலிடக் கோரிக்கைகளை விரைவாகச் செயல்படுத்தவும், நாடு முழுவதும் இருக்கும் அகதிகளை சிறப்பாக விநியோகிக்கவும் உறுதியளிக்கிறது.

கியூபெக் மாகாணத்தில் தற்காலிக குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, அவர்கள் மற்றும் அவர்களது குழந்தைகளுக்கான வீட்டுவசதி மற்றும் பராமரிப்பிற்கான செலவுகளை வழங்க வேண்டும் என்ற முதல்வரின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக இந்த நிதியொ துக்கப்பட்டுள்ளதாககுறிப்பிடப்படுகின்றது.

2021 முதல் 2023 வரையிலான செலவுகளை ஈடுகட்டுவதற்கு மத்திய அரசாங்கத்திடம் 1 பில்லியன் டொலர்களை கியூபெக் முதல்வர் கோரியிருந்தார்.

'கியூபெக்கில் தற்காலிக குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையை கணிசமாகவும் விரைவாகவும் குறைக்க வேண்டியது அவசரமானது' என்று கியூபெக் முதல்வர் கூறியுள்ளார்.





# கனடாவின் உளவுத்துறை தலைவர் ஆரவாரமின்றி இரண்டு தடவைகள் இந்தியா சென்று திரும்பினார்

## நிஜ்ஜர் படுகொலை தொடர்பான தகவல்களை பகிர்ந்துகொள்வதற்காக

கனடாவின் உளவுத்துறை தலைவர், ஆரவாரம் காட்டாமல், அமைதியாக இரண்டு முறை இந்தியா சென்று திரும்பினார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பைச் சேர்ந்தவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜர் என்பவர் கனடாவில் கொல்லப்பட்டது தொடர்பான விசாரணை நடந்துவரும் நேரத்தில், அது தொடர்பான தகவல்களை பகிர்ந்துகொள்வதற்காக, கனடாவின் உளவுத்துறை தலைவர் இரண்டுமுறை இந்தியா சென்று திரும்பியுள்ளார்.

கனேடியர் ஒருவர் கனடாவில் கொல்லப்பட்டதன் பின்னணியில் இந்தியா இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கனடா நாடாளுமன்றத்தில் வெளிப்படையாகக் குற்றம் சாட்டியமையைத் தொடர்ந்து, கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தூதரக உறவில் விரிசல் ஏற்பட்டது.

இந்நிலையில், அந்த சம்பவம் தொடர்பான தகவல்களை இந்தியாவுடன் பகிர்ந்துகொள்வதற்காக கனடா உளவுத்துறை தலைவரான டேவிட் விக்னோல்ட் இந்தியா சென்று திரும்பியுள்ளார். அவர் பிப்ரவரி மாதத்தில் ஒருமுறையும், மார்ச் மாதத்தில் ஒருமுறையும் இந்தியா சென்று திரும்பினார் எனத் தற்போது அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடயம் என்னவென்றால், கனடா உளவுத்துறை தலைவரான டேவிட் விக்னோல்ட் இரண்டு முறை இந்தியா சென்று திரும்பியது அந்த நேரத்தில் யாருக்கும் தெரியாது. அவை குறித்து இந்திய ஊடகங்களிலோ, கனேடிய ஊடகங்களிலோ செய்திகள் வெளியாகவில்லை. அவ்வளவு அமைதியாக அவர் இந்தியா சென்று திரும்பியுள்ளார். உண்மையில் இரு நாடுகளுக்கிடையே தூதரக உறவுகள் இப்படித்தான் இருக்கும்.

ஆரம்பத்தில் நிஜ்ஜர் கொல்லப்பட்டபோது, அதுகுறித்து ட்ரூடோ வெளிப்படையாக பேசாமல் தூதர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை மூலம் அந்த பிரச்சினை எதிர்கொள்ளப்பட்டிருக்குமானால், இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்சினைகள் இவ்வளவு பெரிதாகாமல், பிரச்சினை சுமூகமாக தீர்க்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.




# சட்டத்தரணிகளுக்கு எதிராக பூர்வீகக் குடிகள் மன்றில் மனு

ஒன்ராரியோ, ஜூன் 11

கனடாவுக்கும், ஒன்ராரியோவுக்கும் இடையில் 10 பில்லியன் டொலர்கள் இணக்கப்பாட்டைக் கொண்டு வருவதற்கு உதவிய சட்டத்தரணிகளுக்கு எதிராக பூர்வீகக் குடிகளைச் சேர்ந்த இரு பிரிவுகள் மனு தாக்கல் செய்துள்ளன. செலுத்துவதற்கு பணிக்கப்பட்ட 510 மில்லியன் டொலர்கள் தொகையும் அதிகமானது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த கட்டணம் தொடர்பிலான கலந்துரையாடல்களை நிறுத்துவதற்கும் சட்டத்தரணிகள் முயற்சித்தனர் எனவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நீதிமன்ற இணக்கப்பாடு தொடர்பில் தமக்கு திருப்தியுள்ள போதிலும், சட்டத்தரணிகள் கோருகின்ற 510 மில்லியன் டொலர்கள் அதிகமானது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

# கனடிய பிரதமர் ட்ரூடோவுக்கான மக்களின் ஆதரவு பெரும் வீழ்ச்சி



கனடாவின் தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கான மக்கள் ஆதரவு பாரியளவு வீழ்ச்சி அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடிய லிபரல் கட்சியின் தலைமை பதவிக்கும் அவர் பொருத்தமற்றவர் என மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

நானோஸ் ஆய்வு நிறுவனத்தினால் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

லிபரல் கட்சியின் தலைமை பொறுப்பை வேறு ஒருவர் ஏற்றுக் கொள்வது பொருத்தமானது என மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த கருத்துக்கணிப்பு முடிவுகள் பிரதமரின் எதிர்கால அரசியல் வாழ்வு தொடர்பில் கேள்விக்குறியை உருவாக்கியுள்ளன.

கருத்துக்கணிப்பில் பங்கேற்ற பலரும் லிபரல் கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு வேறு ஒருவர் நியமிக்கப்படுவது பொருத்தமானது எனக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வெறும் 17 வீதமானவர்கள் மட்டுமே ட்ரூடோ தொடர்ந்தும் தலைமை பதவியில் நீடிக்க வேண்டும் என கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஏனையவர்கள் ட்ரூடோ தலைமை பதவியில் நீடிப்பதனை விரும்பவில்லை என தெரிவித்துள்ளனர்.

# கனடாவில் பணியிடத்தில் மோசடி செய்தவருக்கு 6 ஆண்டுகள் சிறை



கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் தான் பணியாற்றிய நிறுவனத்தில் ஒரு மில்லியன் டொலர் மோசடி செய்த பெண் ஒருவருக்கு ஆறு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் கொல்நெவா பகுதியில் கணக்கு பதிவாளராகப் பணியாற்றிய பெண் ஒருவரே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளார்.

62 வயதான கரை சூசன் இயர்ஸ் என்ற பெண் இவ்வாறு நீதிமன்றதினால் தண்டிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் இந்த நிதிச் சூறையாடல் மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் ஓர் முகவர் நிறுவனத்தில் பணியில் ஈடுபட்டிருந்தபோது இந்த பெண் சுமார் 1.3 மில்லியன் டொலர்களை மோசடி செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட காலமாக திட்டமிட்ட அடிப்படையில் இந்த பெண் மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்று நீதிமன்றில் நிரூபணமாகியுள்ளது.